**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 116 | of | 2008 |

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **வித்யா** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-25.03.2026**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

அயிட்டம் எண்.125 ன் விஸ்தீரணம் 4 ஏக்கர் 25 சென்ட் ஆகும். மேற்படி விஸ்தீரணத்தை காட்ட கிரய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் என் தகப்பனார், மதனகோபால், டில்லிபாபு, ஜெயகோபால் ஆகியோர் பெயரில் உள்ளன. மேற்படி சொத்தில் மதனகோபால், டில்லிபாபு, ஜெயகோபால் ஆகியோருக்கும் பாகம் உள்ளது. மேற்படி மதனகோபால், டில்லிபாபு, ஜெயகோபால் ஆகியோரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. ஆனால் இந்த சொத்தில் 1/10 பாகம்

கோரியிருக்கிறேன். மேற்படி மதனகோபால், டில்லிபாபு, ஜெயகோபால் ஆகியோரை தரப்பினராக சேர்க்காததால் தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. அயிட்டம் எண் 125 ல் எவ்வளவு பகுதியை அரசு ஆர்ஜிதம் செய்தது என்று தெரியாது. அயிட்டம் எண் 125 ல் மதனகோபால், டில்லிபாபு, ஜெயகோபால் ஆகியோருக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். அரசு ஆர்ஜிதம் செய்த சொத்து சம்மந்தமாக LAOP வழக்கு நிலுவையில் உள்ளது. அயிட்டம் எண் 126 ல் 1 முதல் 7 பஸ்கள் கே.சி.ராமசந்திரன் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. முதல் 2 பேருந்துகளுக்கு மட்டும் என் தகப்பனார் பெயரில் பதிவு சான்றிதழ் உள்ளது. மற்ற பேருந்துகள் 3 முதல் 7 என் தகப்பனார் பெயரில் இல்லை என்றால் சரிதான். மேற்படி 2 பேருந்துகளுக்கான என் தகப்பனார் பெயரில் உள்ள பதிவு சான்றிதழ்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பேருந்துகள் தற்போது என்ன நிலையில், எங்கு யாரிடம் உள்ளன என்று தெரியாது. இந்த பேருந்துகளில் உரிமை கோரினால் partnership Act மற்றும் company Act படி தான் பரிகாரம் கோர முடியும் என்றும், இந்த தாவாவில் பரிகாரம் கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. ராணியம்மாள் என் தகப்பனாரின் அக்காள் ஆவார். ராணியம்மாள் செங்கல்பட்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாக பிரிவினை வழக்கில் என் தாத்தாவின் சொத்துக்கள் மற்றும் பஸ்களை மட்டுமே காட்டியுள்ளார். இந்த தாவா சொத்துக்களை அந்த வழக்கில் சொத்துக்களாக காட்டவில்லை. அயிட்டம் எண் 125 ராணியம்மாள் போட்ட வழக்கில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ராணியம்மாள் போட்ட வழக்கில் நானும் ஒரு பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் ஆஜர் ஆகாமல் இருந்துவிட்டேன். என் சகோதர்ரகள் சுந்தர்ராஜன், சௌந்தரராஜன் மட்டுமே அந்த வழக்கில் ஆஜர்ஆகி எதிர் வழக்காடினார். அந்த வழக்கு முடிவவிற்கு வந்து அதன் தீர்ப்பை எதிர்த்து ராணியம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளார் என்றால்சரிதான். மேற்படி உயர் நீதிமன்றத்திலும் appeal வழக்கில் நான் ஆஜர் ஆகி நடத்தவில்லை. அந்த மேல்முறையீட்டிலும் சுந்தர்ராஜன்தான் ஆஜர் ஆகி எதிர் வழக்காடினார். நான் தாக்கல் செய்த இந்த வழக்கிற்கு முன்பே ராணியம்மாள் அநத் வழக்கை போட்டுவிட்டார். ராணியம்மாள் வழக்கு பற்றி நான் இந்த வழக்கில் எதுவும் சொல்லவில்லை. தாவா 165 அயிட்ட சொத்துக்களில் வருமானம் வருவதை காட்ட அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பஸ்கள் தனிப்பட்ட நபர் பெயரில் இல்லை என்றும், partnership பெயரில் உள்ளன என்றும் சொன்னால் சரிதான். பஸ்களில் இருந்து வரும் வருமான விவரங்களை கம்பெனி சட்டத்தின்படி கேட்கலாம் என்றும், இந்த தாவாவில் கேட்க முடியாது என்று சொன்னால் அதுபற்றி வழக்கறிஞருக்கு தான் தெரியும். செங்குன்றம் சொத்தை என் தகப்பனார் இறந்த பிறகு நான் என் தாயார் மற்றும் உடன் பிறந்தவர்கள் SS foundation என்ற நிறுவனத்திற்கு விற்றோம் என்றால் சரிதான். அதில் எனக்கு பங்கு தொகையாக ரூ.20 லட்சம் கிடைத்தது. மற்றவர்களுக்கும் தலா ரூ.20 லட்சம் கிடைத்தது. சாராதாம்மாள் என் பாட்டி. சிங்கபெருமாள் கோயிலில்

சுந்தராஜனுக்கு ஒரு சொத்து இருந்ததா என்று எனக்கு தெரியாது. என் பாட்டி சாராதாம்மாள் சிங்கபெருமாள் கோயில் இருந்த சொத்தை சுந்தராஜனுக்கு செட்டில்மன்ட் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி தெரியாது. அந்தசொத்தை சுந்தர்ராஜன் வெளி நபருக்கு விற்றுவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. என் சகோதரி பெயர் சித்ரா. அவர் என் சகோதரர் சுந்தர்ராஜன் மீது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டார். அந்த வழக்கில் நான் தரப்பினர் ஆனால் நான் அந்த வழக்கை நடத்தவில்லை. அந்த வழக்கு தரப்பினர்களுக்குள் சுமூகமாக முடிக்கப்பட்டது. தரப்பினர்களுக்குள் எப்படிப்பட்ட ஏற்பாடு அடிப்படையில் சுமூகமாக முடிக்கப்பட்டது என்று தெரியாது. அதே போல என் சகோதரி இந்திரா எ்ன் மீதும் உடன் பிறந்தவர்கள் மீதும் ஒரு வழக்கு போட்டார் அதுவும் சுமூகமாக முடிக்கப்பட்டது என்று கேள்விப்பட்டடேன் ஆனால் எவ்வாறு சுமூகமாக முடித்தார்கள் என்று தெரியாது. என் மூத்த சகோதரர் எத்திராஜ் மனைவி கற்பகம் பாகபிரிவினை கேட்டு ஒரு வழக்கு போட்டார். அதுவும் சுமூகமாக முடிக்கப்பட்டது. செங்குன்றம் சொத்து மற்றும் சிங்கபெருமாள் கோயில் சொத்து இரண்டையும் விற்றுதான் சுந்தர்ராஜன் மேற்படி தாவா போட்டவர்களுக்கு பணம் கொடுத்து அக்கு விடுதலை பத்திரம் பெற்றார் என்றால் அது தெரியும். ஆனால் அந்த பத்திரத்தை நான் பார்த்ததில்லை. அயிட்டம் எண் 124 இறந்துபோன என் சகோதரர் சௌந்தராஜன் பெயரில் உள்ளது. ஆனால் அந்த கிரய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. சண்முகானந்தா பஸ் சர்வீஸ்

பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தில் என் தகப்பனாரும் அவர் சகோதரர்களும் பாகஸ்தரர்களாக இருந்தனர். நான் மேற்படி என் தகப்பனாரின் சகோதரர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. என் தகப்பனார் ஏற்கனவே கிரயம் செய்துவிட்ட சொத்துக்கள், அரசு ஆர்ஜிதம் செய்துவிட்ட சொத்துக்கள் என தற்போது கூட்டு குடும்பத்திற்கு பாத்தியதை இல்லாத சொத்துக்களுக்கு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே அது நிலைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பஸ் சம்மந்தமாக company law board ல் ஒரு புகார் 2021ல் கொடுத்திருக்கிறேன். அதில் விசாரணை நடந்து வருகிறது. company law board பஸ்களை என் பாகத்திற்கு வழங்கினாலும் பெற்றுக் கொள்ள வேண்டி அந்த புகாரை கொடுத்தேன். எனவே பஸ்களை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. வழக்கு உரிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசையா சொத்துக்களில் இருந்து வருமானம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்றால் சரியல்ல. விற்ற சொத்துக்களை பாகம் கோருவதால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu